# அடகு முற்பணம் (சுவர்ண பிரதீப அடகு முற்பண திட்டம்)

PEOPLE'S BANK
Pride of the Nation

அவசர நிதி தேவைகளுக்காக உங்களுடைய பெறுமதி மிக்க தங்க நகைகளுக்கு ஆகக் கூடிய பாதுகாப்பை அளிக்கின்ற அதேவேளையில் மக்கள் வங்கியின் சுவர்ண பீரதீப அடகு சேவை உங்களுக்கு விரைவான, நம்பகமான மற்றும் நம்பிக்கைக்குரிய சேவையை வழங்குகிறது.

## விஷேட நன்மைகள்

- நிகழ்நிலை(online) ஊடாக எந்தவொரு கிளை/சேவை நிலையத்திற்கும் பகுதிக் கொடுப்பனவு வசதி.
- நாடளாவிய ரீதியில் 751 கிளைகளுக்கும் சேவை நிலையங்களுக்கும் மேற்பட்ட வலையமைப்பின் ஊடாக சிறப்பு வாடிக்கையாளர் சேவை வழங்கப்படுகிறது.
- குறைந்த வட்டி வீதங்கள்
- வனிதா வாசனா /அஸ்வென்ன கணக்கு, தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கு(PFCA) வைத்திருப்பவர்களுக்காக சலுகை வட்டி வீதம்.

## தகுதி அளவுகோள்

- 16 வயதுக்கு மேற்பட்ட தனிப்பட்டவர்கள்/இலங்கை பிரஜைகள்
- நோக்கம் சட்டபூர்வமானதாக இருக்க வேண்டும்.
- தனிப்பட்ட இயல்புடன் தயாரிக்கப்பட்ட தங்க நகைகளை ஏற்றுக்கொள்ள முடியும்.

## வழங்க வேண்டிய ஆவணங்கள்

- தேசிய அடையாள அட்டை - (தேசிய அடையாள அட்டை (NIC) இல்லாவிட்டால், செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரத்தை அல்லது கடவுச்சீட்டை முகவரியை உறுதிப்படுத்தும் ஆவணத்துடன் சமர்ப்பிக்க முடியும். அதில் தேசிய அடையாள அட்டை (NIC) இலக்கம் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்)

## ஏற்புடையதான வட்டி வீதம்

www.peoplesbank.lk என்ற மக்கள் வங்கி இணையத்தளத்தைப் பார்க்கவும்.

## உடன்படிக்கை காலம்

திரட்டிய வட்டியுடன் 12 மாதங்களுக்குள் செலுத்த வேண்டும்.

## கட்டணங்கள்/விதிப்பனவுகள், தரகு, வட்டி போன்றவை.

- ரூ.25,000/-இற்கு உட்பட்ட அடகு நகையினை மீழப்பெறும் போது 30 நாட்களுக்கு ஆகக் குறைந்த வட்டி கணிப்பிடப்படும்.
- ரூ.25,000/-இற்கு மேற்பட்ட அடகு நகையினை மீழப்பெறும் போது 7 நாட்களுக்கு ஆகக் குறைந்த வட்டி கணிப்பிடப்படும்.
- ஒப்பந்தம் செய்து கொண்ட காலத்திற்குள் (12 மாதங்களுக்குள்) செலுத்தி தீர்க்காவிட்டால் செலுத்தத் தவறிய நாளிலிருந்து கொடுப்பனவு செலுத்தப்படும் நாள் வரை 2% தண்டப்பணம் அறவிடப்படும்.

## விண்ணப்ப அளவுகோல்

- நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள கிளைக்கு அல்லது சேவை நிலையத்திற்கு விஜயம் செய்து தேவையை அங்குள்ள பணியாட் தொகுதியினருடன் கலந்துரையடவும்.

## நியதிகளும் நிபந்தனைகளும்

- அடகு முற்பணத்தை தகுந்த வட்டியுடன் ஒரு வருடத்திற்குள் மீளச் செலுத்த வேண்டும்.
- உடன்பட்ட காலப்பகுதிக்குள் செலுத்தித் தீர்க்காவிட்டால் அடகு வைக்கப்பட்ட நகைகளை விற்பனை செய்வதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.
- அடகு பத்திரம் காணாமற் போனால்/அடகு வைத்தவர் இறந்துவிட்டால் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட படிவத்தில் ஒரு சத்தியக்கடதாசியையும் ஏனைய ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

## முறைப்பாட்டைக் கையாளும் நடைமுறை

- info@peoplesbank.lk இன் ஊடாக எங்களை அணுக முடியும்
- சம்பந்தப்பட்ட கிளைக்கு, பிராந்திய தலைமை அலுவலகத்திற்கு அல்லது தலைமை அலுவலகத்திற்கு எழுத்து மூலம் கோரிக்கையைச் சமர்ப்பிக்கவும்.
- சம்பந்தப்பட்ட கிளையை, பிராந்திய தலைமை அலுவலகத்தை அல்லது தலைமை அலுவலகத்தை அழைக்கவும்

## மேலதிக தகவல்களுக்கு

- www.peoplesbank.lk விஜயம் செய்யவும்
- அழைப்பு நிலையம் - 1961
- தலைமை அலுவலகம் 0112481481-8064/8054